**பாலிந்தநுவர பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 08 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 25 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூலை 14 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பாலிந்தநுவர பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் பற்றுச்சீட்டிடப்பட்ட ரூபா 1,453,033 தொகையான முத்திரைக் கட்டண வருமானத்தை கணக்குகளில் பதியும் போது நிலுவை முத்திரைக் கட்டண கணக்கில் வரவு வைத்து திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் வருமானத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஊழியர் பிணை வைப்பு முதலீடு செய்யப்படாத ரூபா 35,554 தொகையொன்று ஊழியர் பிணை வைப்பு முதலீடாகவும், ஊழியர் பிணை வைப்பாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டில் மோட்டார் வாகனமும் வண்டியும் கணக்கில் கைவிடப்பட்டிருந்த ரூபா 39,000 தொகையை மீண்டும் கணக்கீடு செய்யும் போது மோட்டார் வாகனமும் வண்டியும் கணக்கில் வரவு வைத்து திரண்ட நிதியக் கணக்கு செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மோட்டார் வாகனமும் வண்டியும் கணக்கு வரவு வைக்கப்பட்டு தொங்கல் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் மருந்து இருப்பின் பெறுமதி ரூபா 258,912 ஆக இருந்ததுடன் ஐந்தொகையில் ரூபா 410,264 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக மருந்து இருப்பு ரூபா 151,352 தொகை அதிகமாகவும், ஆண்டிற்குரிய மருந்துச் செலவினம் ரூபா 410,264 ஆக இருந்த போதிலும் வருமானச் செலவனக் கணக்கில் செலவினமாக ரூபா 258,912 ஆகவும் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக செலவினம் ரூபா 151,352 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மாகாண சபைகள். உள்ளூராட்சி அமைச்சிலிருந்து கிடைக்கப் பெற்ற கெப் வண்டிக்காக 2015 ஆம் ஆண்டிற்குரியதாக அறவிடப்பட்ட ரூபா 1,059,409 தொகையான சம்பள மீளளிப்புப் பணம் மூலதனச் செலவினக் கணக்கில் வரவு வைத்து வருமான மானியக் கணக்கில் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டில் வேலைக் கடன்பட்டோர் ரூபா 1,440,033 தொகை மற்றும் வேலைக் கடன்கொடுத்தோர் ரூபா 1,440,033 தொகை குறைத்து கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் மூலதன மானியப் பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும் அப் பெறுமதியால் குறைத்து வருமானச் செலவினக் கணக்கில் காட்டப்பட்டிருந்தது.

### 1.3.2 தொங்கல் கணக்குகள்

மீளாய்வாண்டில் ஆரம்பத்தில் ரூபா 206,109 தொகையான தொங்கல் கணக்கின் வரவு மீதியை ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக ஆண்டின் இறுதியில் தொங்கல் கணக்கின் வரவு மீதி ரூபா 168,294 ஆக இருந்தது. பிரதான பேரேட்டின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தொங்கல் கணக்கின் மீதி ரூபா 185,283 வரவு மீதியாக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் அப்பெறுமதி ரூபா 168,294 ஆகக் கொண்டுவரப்பட்டமையால் தொங்கல் கணக்கின் வரவு மீதி ரூபா 16,989 தொகை குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

விரிவான பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படாமையினால் கூட்டுமொத்தமாக ரூபா 14,120,687 தொகையான 03 கணக்கு மீதிகளைக் கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

2006 ஆம் ஆண்டின் பாலிந்தநுவர பிரதேச சபை மற்றும் அகலவத்த பிரதேச சபை என பிரிக்கப்பட்டு வெவ்வேறான அலகாக தாபிக்கப்படும் போது பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த ரூபா 6,166,759 தொகையான கிடைக்க வேண்டிய மீதியையும் ரூபா 6,862,872 தொகையான செலுத்தவேண்டிய மீதியையும் அடிப்படையாகக் கொண்டு கணக்குகள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு கணக்காய்வுத் திகதியான 2016 மே 10 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணங்காமைகள்

(அ) 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வழங்கப்பட்ட மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மூலம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அதிகாரங்களைக் கையளித்தல் மற்றும் அதிகாரங்களை அமுல்படுத்துதல் தொடர்பான ஆலோசனைக் கோவையில் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் நடைமுறையின் பிரகாரம் பெல்லன தபால் அலுவலகத்திற்கு அருகிலும் ஹெடிகல்ல வீதி, பதுறலிய போன்ற இடங்களில் அமைந்துள்ள 02 கைத்தொழில்கள் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளப்படாமல் செயற்பட்டிருந்தது.

(ஆ) இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் 02 வருடங்களை விஞ்சிய ரூபா 516,648 தொகையான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,737,061 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,051,193 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 நிலுவை வருமானம்

மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டுமொத்தமாக ரூபா 1,153,036 தொகையான நிலுவை வருமானம் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158 மற்றும் 159 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 ஆதனவரி

(அ) 2014 ஆம் ஆண்டும் அதற்கு முன்னிருந்தும் கொண்டுவரப்படுகின்ற நிலுவை ஆதனவரி மீதி ரூபா 241,919 தொகை 2015 திசெம்பர் 31 ஆந் திகதியிலும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்காக ரூபா 1,018,436 பற்றுச்சீட்டிடப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 648,279 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் மிகுதியாக உள்ள ரூபா 370,157 தொகையை 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 கைத்தொழில் வரி

மீளாய்வாண்டில் 142 கைத்தொழில் வரியிறுப்பாளர்களிடமிருந்து வரித் தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் அதற்குரிய மதிப்பீட்டு அறிக்கையில் 06 வரியிறுப்பாளர்கள் மாத்திரமே காணப்பட்டனர்.

#### 2.2.4 வியாபார வரி

(அ) மீளாய்வாண்டில் ரூபா 808,250 தொகையான வியாபார வரி பற்றுச்சீட்டிடப்பட்ட வருமானத்தில் ரூபா 52,000 நிலுவையாகக் காணப்பட்டது.

(ஆ) சபையினால் மதிப்பீடு செய்யப்பட்ட 12 வியாபாரங்களுக்குரிய மதிப்பீட்டு அறிக்கைகளின் தகவல்கள் வியாபார வரிப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.5 ஏனைய வருமானம்

2015 ஆம் ஆண்டிற்காக சந்தை வரி சேகரிக்கும் உரித்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட பெறுகைகள் சந்தர்ப்பம் இரண்டின் போதும் எவ்வித பெறுகைகள் விண்ணப்பமொன்றும் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் தலைவரின் ஆலோசனையின் பிரகாரம் சந்தை வரி சேகரித்தல் வருமானப் பரீட்சகருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. முதலாவது 03 மாதத்தில் ரூபா 487,510

வருமானமொன்று கிடைத்திருந்த போதிலும், 2015 ஏப்ரலில் இருந்து மாதத்திற்கு ரூபா 161,111 வீதம் சபைக்கு வரியாக வழங்குவதற்கு வரி சேகரிக்கும் உரித்து வருமானப் பரீட்சகருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் மூன்று மாத அதாவது ரூபா 483,333 பிணை வைப்பொன்று கேள்வியைப் பெற்றவரினால் செலுத்த வேண்டிய போதிலும், ஒரு மாதத்திற்கு மாத்திரம் பிணை வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. உடன்படிக்கையின் பிரகாரம் உரிய மாதத்தின் 25 ஆந் திகதியில் பணம் செலுத்தாமையினால் தண்டப்பணமாக ரூபா 9,861 சபைக்கு அறவிட வேண்டியிருந்த போதிலும், தண்டப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த செயற்பாடுகளுக்காக அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினர்களிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 8,465,734 தொகையொன்று கீழே குறிப்பிட்ட பிரகாரம் கிடைக்க வேண்டியிருந்தது.

| | ரூபா |
|---|---|
| நீதிமன்றத் தண்டப்பணம் | 5,465,734 |
| முத்திரைக் கட்டணம் | 3,000,000 |

### 2.2.7 அறிவித்தல் பதாதைக் கட்டணம்

சபையின் மூலம் அறிவித்தல் பதாதை வருமானத்தைச் சேகரிப்பதற்காக வருடாந்தம் அறிவித்தல் பதாதை மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு மெய்மையாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அறிவித்தல் பதாதை தொடர்பான மெய்மையாய்வு அறிக்கை 2015 ஆம் ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.8 மீன் கடையினை வாடகைக்கு வழங்கல்

(அ) மீண் கடையினை வாடகைக்கு வழங்கும் போது உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(ஆ) தவணை வாடகைப் பணம் தாமதமாகும் சந்தர்ப்பத்தின் போது உடன்படிக்கையின் பிரகாரம் உரிய தண்டப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) குறிப்பிட்ட திகதியின் போது மாதாந்த வாடகைப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

மீளாய்வாண்டின் போது சபையின் அங்கீகாரமின்றி வேலைக் கடன்பட்டோர் கணக்கிலிருந்து ரூபா 13,909,971 தொகை பதிவழிக்கப்பட்டிருந்தது.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிர்வாகம்